019

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2009

**ESP 2470** – ஆரம்பமட்ட தமிழ்மொழி

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 11.07.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

1. (i) எண்ணக்கரு விருத்தி என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன? (09 புள்ளிகள்)

   (ii) எண்ணக்கரு விருத்தியில் சூழலின் தாக்கத்தை விபரிக்குக. (12 புள்ளிகள்)

   (iii) எண்ணக்கரு விருத்தி பற்றியும் மொழிகற்றல் பற்றியும் விளக்கமளித்த இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் முன்வைத்த கோட்பாடுகளை ஒப்புநோக்குக. (12 புள்ளிகள்)

2. (i) 'பிள்ளைகளின் ஆக்கத்திறன் விருத்தி' என்பதனால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது? (09 புள்ளிகள்)

   (ii) ஆக்கத்திறன் விருத்திக்கு ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கு வகுப்பறையில் வழங்கக்கூடிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர் என விபரிக்க. (12 புள்ளிகள்)

   (iii) ஆக்கத்திறன் விருத்தியில் மொழியாசிரியர் என்ற வகையில் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (12 புள்ளிகள்)

3. (i) பாடசாலை மட்டக் கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் வேறுபடுத்திக் காட்டுக. (09 புள்ளிகள்)

   (ii) கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

   (iii) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழி அடைவைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான கணிப்பீட்டுக் கருவிகள் மூன்றைத் தயாரித்து அவை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான புள்ளிவழங்கும் திட்டத்தைத் தருக. (12 புள்ளிகள்)

4. (i) முதன்மை நிலை மூன்றில் சிறுவர் இலக்கியம் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விபரிக்க. (09 புள்ளிகள்)

(ii) முதன்மைநிலை மூன்றில் தற்போதுள்ள பாடநூலில் இலக்கியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள இடம்பற்றிய உமது அபிப்பிராயத்தை எடுத்துரைக்க (12 புள்ளிகள்)

(iii) இலங்கையில் சிறுவர் இலக்கியத்திற்கு பங்களிப்புச் செய்த இருவர் பெயரைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவரின் ஆக்கங்கள் பற்றிய உமது கருத்தை எடுத்துரைக்க. (12 புள்ளிகள்)

5. ஆரம்பவகுப்பு மாணவர்களிடையே உச்சரிப்புத் திறனை மேம்படுத்த மொழியாசிரியர் ஒருவர் பின்வருவனவற்றை எவ்வாறு பயன்படுத்த முடியும் என விளக்குக.

(1) பா ஓதலும் அசைவுடன் பாடுதலும்

(2) கதை கூறுதல்.

(3) சிறு நாடகங்கள் நடித்தல்.

(ஒவ்வொன்றுக்கும் 11 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று பற்றி விளக்கி எழுதுக.

i. ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழித் தேர்ச்சியில் சிறுவர் சஞ்சிகைகளின் பங்கு.

ii. ஆரம்பவகுப்பு மாணவர்களிடையே வாசிப்புத்திறன் விருத்தியின் இன்றியமையாமை.

iii. ஆரம்பவகுப்பு மாணவர்களின் கற்றலைப் மேம்படுத்துவதில் சூழல் காரணிகளின் பங்களிப்பு.

iv. ஐந்தாம் தரத்தில் கற்கும் மாணவர்களிடையே தகவல் சேகரிக்கும் ஆர்வத்தினைத் தூண்டுதலில் மொழியாசிரியரின் பங்கு.

(ஒவ்வொன்றுக்கும் 11 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)